செ.வெ.எண்: 65 நாள்: 25.01.2017

# மத்திய வறட்சி ஆய்வுக்குழுவினரால் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏற்பட்ட சேதம் குறித்த முழுவிபர அறிக்கை மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்டம், ரோஜா இல்லம் விருந்தினர் மாளிகையில் விவசாய வறட்சி பாதிப்பு குறித்த ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள், மத்திய, மாநில வறட்சிக்குழு, தமிழ்நாடு வேளாண் இயக்குநர் திரு.தெட்சிணாமூர்த்தி,இ.ஆ.ப., மத்திய ஊரக சார்புச்செயலாளர் திரு.எஸ்.பி.திவாரி, காவேரி மற்றும் தென்னக நீர்ப்பாசன இயக்குநர் (கண்காணிப்பு) திரு.ஆர்.அழகேசன் அவர்கள் ஆகியோர் தலைமையில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (25.01.2017) கலந்தாய்வு மேற்கொண்டார்.

இந்த கலந்தாய்வில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழகத்தில் அக்டோபர் 1 முதல் டிசம்பர் 31ம் தேதி வரை வடகிழக்கு பருவமழை காலமாகும். இந்த பருவமழை காலத்தில் சராசரியாக 440 மி.மீ மழை கிடைக்கப்பெறும். ஆனால் நடப்பாண்டில் 168.3 மி.மீ மழையே கிடைக்கப்பெற்றது. இதனால் மாநிலம் முழுவதும் வறட்சி சூழ்நிலை உருவாகியுள்ள நிலையில் மத்திய அரசின் புதிய வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவிக்கும் வகையில் வறட்சி பாதித்த இடங்களை நேரடி ஆய்வு செய்து தமிழகத்தை வறட்சி மாநிலமாக தமிழகஅரசு அறிவித்துள்ளதை தொடர்ந்து, இதுகுறித்து ஆய்வு மேற்கொள்ள மத்திய அரசால் வறட்சி ஆய்வுக்குழு அனுப்பப்பட்டுள்ளது. இதன்படி புதுக்கோட்டை மாவட்டத்தில் சம்பா நெல் சாகுபடி செய்யப்பட்டு வறட்சியால் பயிர் கருகிய வயல்வெளிகளை இந்த ஆய்வுக்குழு பார்வையிட்டு ஆய்வு செய்யவுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 1.65 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் சம்பா நெல் சாகுபடி செய்யப்பட்டு இருந்தது. இதில் வறட்சியால் பயிர் கருகிய வயல்வெளிகள் 1.05 இலட்சம் ஏக்கர் பாதிக்கப்பட்டுள்ளதாக கணக்கெடுப்பு எடுக்கப்பட்டுள்ளது. இன்று வருகை தந்துள்ள மத்திய வறட்சிக்குழுவினர் அறந்தாங்கி வட்டாரம், பள்ளத்திவயல், கொண்ணமடை டேங்க், பெருங்காடு, ஏகணிவயல், ஏகப்பெருமாளூர் ஆகிய பகுதிகளை ஆய்வு மேற்கொள்ளவுள்ளனர். மேலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சியினால் ஏற்பட்ட சேதம் குறித்த முழுவிபரத்தினையும் ஒரு வாரத்திற்குள் அறிக்கையாக தயார் செய்து மத்திய அரசிடம் சமர்ப்பிப்பார்கள். இதன் மூலம் வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் உரிய நிவாரணம் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.இ.ஏ.இரத்தினசபாபதி (அறந்தாங்கி), திரு.பி.ஆறுமுகம் (கந்தர்வக்கோட்டை), மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, இணை இயக்குநர் (வேளாண்மை) திரு.அண்ணாமலை, கூட்டுறவு சங்க தலைவர்கள், முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், வட்டாட்சியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**